முருகப்பெருமான் துணை

தவத்திரு ஆறுமுக அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1379

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.07.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான சக்திமிகு அரங்கா வாழ்க
ஞானிகளை படைக்கவந்த தேசிகா வாழ்க
தானதருமம் கொண்டே இந்த உலகினில்
தனிப்பெரும் மகத்துவம் புரிந்து வருகின்ற
2. புரிந்து வருகின்ற அரங்கனே புண்ணியனே
புகலுவேன் உந்தனுக்கு சுப்ரமண்யர் யானும்
பெருமைபட ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 24ம் நாள், 09.07.2023, ஞாயிற்றுக்கிழமை)
பேராற்றல் அரங்கன்நீ உலகில் பெற்றுசிறக்க
3. சிறக்கவே அரங்கனே உயர்மாந்தர்களை தேடி
சித்திதந்து வரமாக அவர்கள் வழி
மறுக்கா இந்த உலகில் பேர்அற்புதத்தை
மகான் என்வெளிப்பாடாக நடத்தஇருக்கும்
4. இருக்கின்ற ஞானதேசிகனே அரங்கனே
இணையில்லா மாதவசி நீயப்பா
கருத்தாக உன்அவதாரம் புரிந்துகொண்டால்
கலியுகத்தார் எல்லாம் ஞானிகளாவரப்பா
5. அப்பப்பா அரங்கன் தர்மம்
அகிலமெங்கும் பாதுகாப்பை தரஇருக்க
ஒப்புகொண்டு உன்வழி வந்து
உலகோர் தர்மத்தை செய்தால்போதும்
6. போதுமப்பா கலியுகம் தானும்
பேரிடர் பிரச்சனை அனைத்தையும் கடந்து
ஆதரவு மிக்கநல் ஞானபூமியாக
அழிவென்பதே இனிஇல்லாத ஆற்றல்மிக்க பூமியாக

7. ஆகவே மாற்றங்கண்டு இந்த கலியுகம்
அரங்கனால் அரங்கன் அவதார நோக்கத்தால்
மாற்றங்காணும் ஞானயுகமாக
மக்களெல்லாம் ஞானிகளாக மாற்றம்பெறக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–